# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜகண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.09.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் அரச்சலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதி நகர் காவல் நிலையத்தில் கடந்த 15.07.2022 ம் தேதி பகல் 14.00 மணிக்கு அமராவதி காவல்நிலைய உதவி ஆய்வாளர் சிவராஜ் என்பவர்நிலைய அலுவலில் இருந்த போது திருமூர்த்தி மகன் சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 54/2022 ச/பி. 279, 304(A), 294(b), 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அசல் ஆவணங்களை கனம் நீதிமன்றத்திற்கும் உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் கடந்த 15.07.2022 ம் தேதி சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராமசாமி மற்றும் மருதமுத்து என்பவர்கள் முன்னிலையில் மாதிரி மாதிரி வரைபடம் வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து

இருவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் **அசா.ஆ.4** என்று குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் சாட்சிகள் சிவக்குமார், மாரிமுத்து, சாமி, ராஜேஸ்வரன், முருகன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பந்தப்பட்ட எதிரி மதன் குமார் என்பவரை கடந்த 15.07.2022 ம் தேதி 18.30 மணிக்கு சின்னகுமாரபாளையம் பிரிவு அருகில் நின்று கொண்டிருந்தவரை கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்காக பாரா காவல் வசம் ஒப்படைத்தேன். பின்னர் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார் சாட்சிகள் சோழன், செந்தில்குமார், குருசாமி, சிவக்குமார், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தி பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அசா.ஆ.5** என குறியீடு செய்யப்படுகிறது.
3. பின்னர் வழக்கில் இறந்து போன கீதா என்பவரின் பிரேதத்தின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு முதல்நிலை காவலர் 256 பூமிநாதன் என்பவர் மூலமாக சட்டம் சார்ந்த அரசு மருத்துவருக்கு பிரேத பரிசோதனைக்காக ஆஜர்படுத்தினேன். பிரேத பரிசோதனைக்கு பின் உடலை பெற்று அவர்கள் உறவினர் வசம் ஒப்படைத்தேன்.
4. இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 78 T 6005 Mahendra Super மற்றும் TN 78 U 9961 Hero Duet ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி ஜெயந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **TN 78 T 6005** மகேந்திரா சூப்பர் வாகனத்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை **அசா.ஆ.6** என குறியீடு செய்யப்படுகிறது. **TN 78 U 9961 Hero Duet** வாகனத்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை **அசா.ஆ.7** என குறியீடு செய்யப்படுகிறது.
5. மேலும் வழக்கில் இறந்து போன கீதா என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த உடுமலை அரசு மருத்துவர் உமர் ஷெரிப் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். கீதா என்பவரின் பிரேத பரிசோதனை சான்று **அசா.ஆ. 8** என குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சிவராஜ் என்பவரை விசாரித்து வழக்கின் புலன்

விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. விபத்தில் இறந்து போன கீதா என்பவர் ஊர்காவல் படை காவலர் என்றால் சரியல்ல, கீதா என்பவர் உடுமலை குருவப்ப நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு ஒருங்கிணைப்பாளராக இருந்தார். உங்களுடைய குற்ற அறிக்கையில் எந்த இடத்திலும் கீதா என்பவர் மேற்படி ஊர் காவல் படை என சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சொல்லவில்லை. இறந்து போன கீதா ஊர் காவல் படையில் பணிபுரிந்தார் என்றாலும் நீங்கள் வடக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல அவர்கள் Deputation Duty ல் ஊர்காவல் படையில் இருந்தார்களா என தெரியவில்லை.வழக்கில் இறந்து போன கீதா என்பவரை வழக்கிற்கு முன்பு உங்களுக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.
2. சம்பவம் நடந்ததாக சொல்ல கூடிய இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இடைவெளி உள்ளது என்றால் சுமார் 12 கிலோமீட்டர். உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து அமராவதி நகர் காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் அமராவதி காவல் நிலையத்தில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர்.
3. புகாரில் பின்புறம் சமர்ப்பிக்கப்படுகிறது என எழுதியுள்ள பத்தியில் குற்ற எண் காலியிடமாக விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பத்தியில் மதியம் என்ற சொல் இடைச் சொற்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
4. வழக்கு கோப்புகள் உங்களிடம் எந்த தேதியில், எப்பொழுது ஒப்படைக்கப்பட்டது என முதல் தகவல் அறிக்கையிலோ குற்ற அறிக்கையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, 15.07.2022 ம் தேதி சமர்பித்ததாக மாதிரி வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ளது. 15.07.2022 ம் தேதி எப்போது உங்களிடம் வழக்காம ஒப்படைக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை.
5. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் அசா.1 விபத்து நடந்ததாக சொல்லப்படும் ஊருக்கு யார் வீட்டிற்கு வேலைக்கு சென்றதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், எலட்ரீசியன் வேலைக்கு செல்வது சம்பந்தமாக பேசிக்கொண்டு நின்றிருந்தார்கள்.
6. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மூன்று நாட்களுக்கு பின்னிட்டு தான் வாகன ஆய்வுக்கு அனுப்பி உள்ளீர்கள் என்றால்

சரிதான். மூன்று நாட்கள் காலதாமதமாக அனுப்பியதற்கான காரணம் குற்ற அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் எதிரியை கைது செய்து, ஆவணங்கள் பெற காலதாமதமானது. இது குறித்து குற்ற அறிக்கையில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லவில்லை குறிப்பிட்டுள்ள செல்லதுரை, செந்தில்குமார், கண்ணப்பன் ஆகியோர்களை நீங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்ட உடுமலை – குருவப்ப நாயக்கனூர் பாதை ரோடு பொதுமக்கள் அதிகமாக போக்குவரத்து நெரிசலாக உள்ள ரோடு என்றால அது கிராமத்து ரோடு ஆகும் நெரிசல் இருக்காது, வாகனங்கள் சென்று கொண்டிருக்கும்.

7. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் கிழக்கு பகுதியில் தான் பஸ் ஸ்டாப் உள்ளது என்றாலும், கிழக்கு பகுதியில் பொதுமக்கள் அதிகமாக கூட கூடிய பகுதி என்றாலும் அங்கு வீடுகள் தான் உள்ளது. நீங்கள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் கிழக்கு பகுதியில் பொதுமக்கள் அதிகமாக கூடும் பகுதியில் பஸ் ஸ்டாப்பும் உள்ளது என்றால் சரியல்ல. ரோட்டிற்கு வடபுறத்திலும் தென்புறத்திலும் ரோடு பிரிந்து செல்வதாக வரைபடத்தில் காட்டியுள்ள நிலையில் அதற்கு மேல் புறத்திலும் கிழபுறத்திலும் வேகத்தடை உள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

8. சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் வாகனத்தின் டயர் மார்க் பற்றி வரைபடத்தில் காட்டியுள்ளிர்களா என்றால் இல்லை. புகாரிலும் அசா.1 வாக்குமூலத்திலும் விபத்தில் இறந்து போன கீதா என்பவர் வாகனத்தை நிறுத்திவிட்டு நடந்து நடந்து செல்லும் பொழுது தான் இந்த விபத்தை ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறியுள்ளார்களா என்றால் நடந்து சென்றதாக சொல்லவில்லை. வரைபடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் எங்கு இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஆக இருக்கும் என சாலை ஓரமாக எடுத்து வைக்கப்பட்டது. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் இயங்கும் நிலையில் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. ரோட்டிற்கு இருபுறமும் எத்தனை அடிக்கு மண் பாதை உள்ளது என்றால் வெகு நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. வரைபடத்தில் மண்பாதை குறித்து ஏதேனும் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை.

9. விபத்து பதிவேட்டில் விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் கீதா என்பவரை சிவக்குமார் சிகிச்சைக்கு அனுமதித்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், அவர் ஆம்புலன்ஸ் தகவல் சொல்லி அனுப்பி வைத்து பின்னிட்டு சென்றுள்ளார். விபத்தில்

இறந்ததாக சொல்லக்கூடிய கீதா என்பவர் அன்றைய தேதியில் ஊராட்சி பணி நிமித்தமாக இருந்தார் என்பதற்கான ஆதாரம் கைப்பற்றவில்லை என்றால் சரிதான், ஆனால் பணியின் நிமித்தமாக சென்றுள்ளார். ஆலாம்பாளையம் கிராமத்தில் கீதா என்பவர் கிராம ஊராட்சி பணி நிமித்தமாக இருந்தார் என்பதற்கான ஊராட்சி செயலாளரையோ கிராம பணியாளரையோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

10. எதிரி பயன்படுத்தியதாக சொல்லக்கூடிய வாகனத்தை வலது புறத்தில் பேலன்ஸ் ராடு கட்டாகி இருந்ததை பார்த்தீர்களா என்றால் ஞாபகம் இல்லை. வலது புறத்தில் பேலன்ஸ் ராடு கட்டாகி இருந்தால் வாகனத்தை இயக்க இயலாது என்றால் சரியல்ல. வலது புறத்தில் பேலன்ஸ் ராடு என்பது வாகனத்தின் முக்கியமான பகுதி என்றாலும் அது கட்டாகி இருந்தால் வாகனத்தை இயக்க இயலாது என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ராமசாமி வீட்டின் முன் உள்ள டிரைனேஜ்க்கு முன்பாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தில் ராமசாமியின் வீட்டின் முன்பு நின்று பேசிக் கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அசா.1 சொல்லியது போல் சம்பவம் நடைபெற்று இருந்தால் நின்று கொண்டிருந்த மற்ற சாட்சிகளின் மீதும் வாகனங்கள் மோதி இருக்கும் என்றாலும் அவர்களுக்கும் விபத்து ஏற்பட்ட வாய்ப்பிருக்கும் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தை உங்களுக்கு சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டியது என்றால் காவல் உதவி ஆய்வாளர் அடையாளம் காட்டி ராமசாமி மற்றும் சுந்தரராஜ் என்பவர்களை விசாரித்தேன்.

12. எதிரியானவர் அசா.1 மற்றும் அசா. 2 ஐ லிவரை காட்டி கெட்ட வார்த்தையால் திட்டியும், கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த லிவரை கைப்பற்றவில்லை என்றால் ஆமாம். அசா.1 மற்றும் அசா. 2 க்கும் மன உளைச்சல் ஏற்பட்டதாகவோ, உயிர் பயம் ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை, ஆனால் கெட்ட வார்த்தை பேசி லிவரை காட்டி கொல்லாமல் விட மாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள்.

13. அ.சா.2 மாரிமுத்து அ.சா.3 சாமி ஆகியோர் எலக்ட்ரீசியன் வேலைக்கு செல்பவர்கள் என்றால் சரிதான். உங்கள் விசாரணையிலும் அவ்வாறு தான் சொல்லியுள்ளார்கள் என்றால்

சரிதான்.TN 78 6005 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 5 வது காலத்தில் வண்டியின் கம்பெனி பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் வண்டியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நிங்கள்அசா.1 சொல்வது போல் எதிரி எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் எதிரியின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் காரணமில்லை என்றாலும் சரியல்ல.

14. மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று 40 நாட்கள் கழித்து தான் ஆய்வாளரை விசாரித்து உள்ளிர்கள் என்றால் 18.07 ல் அனுப்பி 27.08 ல் விசாரித்துள்ளேன். ஆய்வுக்கு அன்றைய தினம் உட்படுத்திவிடுவோம், ஆனால் ஆய்வறிக்கை வர காலதாமதம் ஆகும், அதற்கு முன் கடிதம் கொடுத்து ஆய்வறிக்கை பெற்றோம். காலதாமதம் குறித்து சொல்லவில்லை என்றால ஆமாம். சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரியல்ல.

15. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் போது வாகனம் வலது பேலன்ஸ் ராடு கட்டாகி ரோட்டின் இடதுபுறம் நின்று கொண்டிருந்தது என்றாலும் அதை கவனிக்காமல் கீதா என்பவர் போன் பேசி கொண்டு வந்து வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எதிரியின் வாகனத்தின் மீது மோதி துாக்கி எறியப்பட்டு காயம் ஏற்பட்டு விபத்தானது. மேற்படி வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. கீதாவின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் காரணம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

16. மோட்டார் வாகன விபத்தில் நஷ்டஈடு பெற வேண்டி காரணத்திற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு போட்டு பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. வழக்கின் குற்றசாட்டுக்கு எதிரி பொறுப்பாக மாட்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன சொல்லப்பட்ட கீதா என்பவர் ஊர் காவல் படையில் வேலை செய்து வந்த காரணத்தினால் காவல் துறைக்கு நன்கு பரிச்சயமானவர் என்பதாலும் எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு போட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.